*கவனிக்க .- 2014.11.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1891 - 2014 නොවැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2014.11.28

*1891 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1694 | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*
### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2014, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, திசெம்பர் மாதம் 5 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

மாநகர சபை விதி

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அத்தியாயத்தின் நகர சபை கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருமான ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மாநகர சபை உறுப்பினர்களுக்காக தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்துவதற்குரிய விதியை இத்தால் பிறப்பிக்கின்றேன்.*

சட்டத்தரணி, ஜே. பீ. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,
வடமேல் மாகாண முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றமும்,
மாகாண நிருவாக, மனிதவள, கல்வி,
கலாசார நடவடிக்கை, காணி, சூழல், சுற்றுலா,
முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
உணவு வழங்கல், விநியோக அமைச்சரும்.

முதல் அமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
2014, ஒற்றோபர் 20.

**விதி**

(1) இந்த விதி மாநகர சபைகளில் உள்ள உறுப்பினர்களுக்காக தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய விதியாக அறிமுகப்படுத்தப்படும்.

(2) மாநகர சபை உறுப்பினர்களுக்காக சபையின் முறையான பிரேரணை நியமப்படி 3,000 ரூபாவிற்கு ஆகக்கூடிய அளவிற்கு உட்பட்டு தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்த முடியும்.

(3) இந்த கொடுப்பனவு சபை நிதியத்திலிருந்து செலுத்தவேண்டியதுடன் அதற்காக வருடாந்த வரவு செலவு மூலம் முன் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

(4) (அ) கீழ் காணப்படும் சந்தர்ப்பங்களில் மாநகர சபை உறுப்பினர்கள் தொடர்பாடல் கொடுப்பனவிற்காக உரித்தற்றவராவார்.

(i) கொடுப்பனவு செலுத்துவதற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபை கூட்டத்திற்கும் செயற்குழு கூட்டங்களுக்கும் சபையின் அனுமதியின்றி கலந்துகொள்ளாத உறுப்பினர்.

(ii) ஏதாவதொரு குற்றச் செயலுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் உள்ள உறுப்பினர்

(iii) வடமேல் மாகாண சபையில் 1991 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி சபை (நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் அதிகாரம்) கட்டளைப்படி அல்லது மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 277 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபையின் உறுப்பினர்களின் நடவடிக்கையையும் அலுவல்களையும் தடை செய்திருத்தல்.

என்றாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருந்த அல்லது சேவையில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் ஏதேனும் மாதத்தின் ஒரு பிரிவாகும் சந்தர்ப்பத்தில் அந்த மாதத்தின் மீதிக் காலத்திற்காக விகித முறைப்படி கணக்குப் பார்த்து இந்த கொடுப்பனவு செலுத்தப்படும்.

(ஆ) இந்த கட்டளையின் (அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டாலும் உறுப்பினர்கள் கடமைக்காக முறையான அனுமதியுடன் செயற்படும் சந்தர்ப்பத்தில் சபை கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமையினால் அவரின் கொடுப்பனவு உரிமையற்று போகலாகாது.

11-754/1

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

நகர சபை விதி

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (255 ஆம் அத்தியாயமான) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 193 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும்*

உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருமான ஜே. பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி நகர சபை உறுப்பினர்களுக்காக தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்துவதற்குரிய விதியை இத்தால் பிறப்பிக்கின்றேன்.

சட்டத்தரணி ஜே. பீ. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,
வடமேல் மாகாண முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றமும்,
மாகாண நிருவாக, மனிதவள, கல்வி,
கலாசார நடவடிக்கை, காணி, சூழல், சுற்றுலா,
முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
உணவு வழங்கல், விநியோக அமைச்சரும்.

முதல் அமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
2014, ஒற்றோபர் 20.

**விதி**

(1) இந்த விதி நகர சபைகளில் உள்ள உறுப்பினர்களுக்காக தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய விதியாக அறிமுகப்படுத்தப்படும்.

(2) நகர சபை உறுப்பினர்களுக்காக சபையின் முறையான பிரேரணை நியமப்படி 3,000 ரூபாவிற்கு ஆகக்கூடிய அளவிற்கு உட்பட்டு தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்த முடியும்.

(3) இந்த கொடுப்பனவு சபை நிதியத்திலிருந்து செலுத்தவேண்டியதுடன் அதற்காக வருடாந்த வரவு செலவு மூலம் முன் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

(4) (அ) கீழ் காணப்படும் சந்தர்ப்பங்களில் நகர சபை உறுப்பினர்கள் தொடர்பாடல் கொடுப்பனவிற்காக உரித்தற்றவராவார்.

(i) கொடுப்பனவு செலுத்துவதற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபை கூட்டத்திற்கும் செயற்குழு கூட்டங்களுக்கும் சபையின் அனுமதியின்றி கலந்துகொள்ளாத உறுப்பினர்.

(ii) ஏதாவதொரு குற்றச் செயலுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் உள்ள உறுப்பினர்.

(iii) வடமேல் மாகாண சபையில் 1991 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி சபை (நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் அதிகாரம்) கட்டளைப்படி அல்லது நகர சபை கட்டளைச்சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் ஏதாவதொரு நகர சபையின் உறுப்பினர்களின் நடவடிக்கையையும் அலுவல்களையும் தடை செய்திருத்தல்.

என்றாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருந்த அல்லது சேவையில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் ஏதேனும் மாதத்தின் ஒரு பிரிவாகும் சந்தர்ப்பத்தில் அந்த மாதத்தின் மீதிக் காலத்திற்காக விகித முறைப்படி கணக்குப் பார்த்து இந்த கொடுப்பனவு செலுத்தப்படும்.

(ஆ) இந்த கட்டளையின் (அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டாலும் உறுப்பினர்கள் கடமைக்காக முறையான அனுமதியுடன் செயற்படும் சந்தர்ப்பத்தில் சபை கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமையினால் அவரின் கொடுப்பனவு உரிமையற்று போகலாகாது.

11-754/2

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

பிரதேச சபை விதி

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும்

உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருமான ஜே. பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி பிரதேச சபை உறுப்பினர்களுக்காக தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்துவதற்குரிய விதியை இத்தால் பிறப்பிக்கின்றேன்.

சட்டத்தரணி ஜே. பீ. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,
வடமேல் மாகாண முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றமும்,
மாகாண நிருவாக, மனிதவள, கல்வி,
கலாசார நடவடிக்கை, காணி, சூழல், சுற்றுலா,
முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
உணவு வழங்கல், விநியோக அமைச்சரும்.

முதல் அமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
2014, ஒற்றோபர் 20.

## விதி

(1) இந்த விதி பிரதேச சபைகளில் உள்ள உறுப்பினர்களுக்காக தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்துவதற்கு உரிய விதியாக அறிமுகப்படுத்தப்படும்.

(2) பிரதேச சபை உறுப்பினர்களுக்காக சபையின் முறையான பிரேரணை நியமப்படி 3,000 ரூபாவிற்கு ஆகக்கூடிய அளவிற்கு உட்பட்டு தொடர்பாடல் கொடுப்பனவு செலுத்த முடியும்.

(3) இந்த கொடுப்பனவு சபை நிதியத்திலிருந்து செலுத்தவேண்டியதுடன் அதற்காக வருடாந்த வரவு செலவு மூலம் முன் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

(4) (அ) கீழ் காணப்படும் சந்தர்ப்பங்களில் பிரதேச சபை உறுப்பினர்கள் தொடர்பாடல் கொடுப்பனவிற்காக உரித்தற்றவராவார்.

(i) கொடுப்பனவு செலுத்துவதற்குரிய மாதத்தில் நடாத்தப்பட்ட சபை கூட்டத்திற்கும் செயற்குழு கூட்டங்களுக்கும் சபையின் அனுமதியின்றி கலந்துக்கொள்ளாத உறுப்பினர்.

(ii) ஏதாவதொரு குற்றச் செயலுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் உள்ள உறுப்பினர்.

(iii) வடமேல் மாகாண சபையில் 1991 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி சபை (நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் அதிகாரம்) கட்டளைப்படி அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபையின் உறுப்பினர்களின் நடவடிக்கையையும் அலுவல்களையும் தடை செய்திருத்தல்.

என்றாலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருந்த அல்லது சேவையில் இருந்து தடுத்து வைக்கபபட்டிருந்த காலம் ஏதேனும் மாதத்தின் ஒரு பிரிவாகும் சந்தர்ப்பத்தில் அந்த மாதத்தின் மீதிக் காலத்திற்காக விகித முறைப்படி கணக்குப் பார்த்து இந்த கொடுப்பனவு செலுத்தப்படும்.

(ஆ) இந்த கட்டளையின் (அ) பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிட்டாலும் உறுப்பினர்கள் கடமைக்காக முறையான அனுமதியுடன் செயற்படும் சந்தர்ப்பத்தில் சபை கூட்டத்திற்கு கலந்து கொள்ளாமையினால் அவரின் கொடுப்பனவு உரிமையற்று போகலாகாது.

11-754/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.